# நிஜங்கள் நடிப்பாகவும், நடிப்பு நிஜமாகவும் கொண்ட நம்மவர் திரைப்படம் 'பொய்யா விளக்கு'

லோகேந்திரலிங்கம்




"பொய்யா விளக்கு'' திரைப்படம் கடந்த வாரம் கனடாவின் ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள வுட்சைட் சினிமாவில் ஒரே ஒரு காட்சியாக காண்பிக்கப்படுகின்றது என்ற அழைப்பு கிடைத்ததும் குறித்து வைத்துக் கொண்டேன், அவசியம் ஓடிச் சென்று பார்க்க வேண்டும் என்று. டாக்டர் வரதராஜா என்னும் முக்கியமான பெயர்ஈ 2009 இறுதி யுத்தத்திற்குப் பின்னர் உலகத் தமிழர்கள் மத்தியில் நன்கு அறியப்பட்ட ஒரு பெயர். ஆதற்கு முன்னரும் கூட வன்னி மண்ணில் சேவையாற்றிய வைத்தியப் பெருந்தகைகளில் ஒருவராக அவர் செய்திகளிலும் முக்கியத்துவம் பெற்ற ஒருவர்.

நடித்துப் புகழைத் தட்டிக்கொண்ட ஆயிரம் நடிகர்களை நாம் திரைகளிலும் நேரிலும் பார்த்திருப்போம். ஆனால் நற்சேவை மூலம் புகழைச் சம்பாதித்து, அதனைத் தொடர்ந்து நடிக்க வந்துள்ள ஒருவரென்றால், அவர் டாக்டர் வரதராஜா என்னும் ஒருவராகத் தான் இருக்க முடியும்





வன்னி மண்ணில் தொடர்ச்சியாக பல ஆண்டுகள் வைத்திய அதிகாரியாக பணியாற்றி பின்னர் 2009 ல் இறுதி யுத்தம் நெருங்கிக்கொண்டிருந்த உயிர்களை இழக்கும் அபாயம் நிறைந்த நாட்களில் இறுதி வரை நின்று "என் மக்களை தனியாக விட்டு விட்டு இந்த இடத்தை விட்டு நீங்கமாட்டேன்'' என்று சத்திய வசனங்களோடு அங்கு வாசம் செய்து, வைத்தியம் பார்த்தவர் டாக்டர் வரதராஜா. இறுதி யுத்தத்தின் போது மோசமாகக் காயப்பட்டவர்களுக்கு கடவுளைப் போன்று காட்சியளித்தவர் அவர். மக்கள் தாங்களுக்கு குண்டுத் தாக்குதல்களினால் எற்பட்ட காயங்களின் வலிகளை டாக்டர் வரதராஜாவின் கைகள் பட்ட வேளைகளில் மறந்திருநதார்கள். பல உயிர்களை காப்பாற்றி யுத்தம் நடைபெறும் பகுதிகளிலிருந்து சேவை நிறுவனங்களின் உதவிகளுடன் காயப்பட்டவர்கள் வெளியேற்றிய ஒரு செயல் வீரர். அவையெல்லாம் நாம் அந்நேரத்தில் செவிமடுத்த செய்திகள். - வாசித்தறிந்த வரிகள்.



அவரது முகமும் பெயரும் அழைப்பிதழில் இருந்ததால் அன்றைய தினம் ஓடியே சென்று திரையரங்கை அடைந்தேன். காரணம் திரைப்படம் தொடங்கும் நேரத்திற்கு அங்கு செல்ல இயலாதவனாய், நான் சற்று பின்தங்கிவிட்டேன்.

அங்கு நான் சென்றபோது "பொய்யா விளக்கு'' திரையில் எரிந்து கொண்டிருந்தது. வெளிச்சம் அதிகம் இல்லை. ஏனைய தமிழகத்தின் திரைப்படத்தைப் பார்க்கும் ரசிகர் நிறைந்த அரங்கில் இருந்து எழும்பும் கூச்சலோ, சிரிப்பொலியோ, அன்றி ஆரவாரமோ இன்றி பார்வையாளர் பகுதி அமைதியாக இருந்தது.

திரையிலும் அழுகையும் சோகமும் நிறைந்த ஒரு காட்சி ஓடிக்கொண்டிருந்தது. அந்தக் காட்சியை பார்த்து விட்டு எப்படி எமது ரசிகர்களால் சிரிக்க முடியும்? கூச்சலிட முடியும்?



நான் திரையில் பார்த்த முதற்காட்சி. டாக்டர் வரதராஜா (திரைப்படத்திலும் அவரது பெயர் அதுவாகவே இருந்தது) அமெரிக்காவில் தான் தனது மனைவி மற்றும் மகளோடு வசிக்கும் வீடு.

இரவில் அவரது மகள் தூக்கத்தில் குண்டுச் சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழுந்து அழுகின்றாள். வன்னியில் இறுதி யுத்தத்தின்போது அந்தக் குழந்தை வாழ்ந்த காரணத்தால் அந்த நினைவுகள் அவளை தூக்கத்திலிருந்து எழுப்பி விடுகின்றன. அழுத வண்ணம் தன்னை அணைத்து நின்ற அப்பா வரதராஜாவிடம் கேட்கின்றாள்

"அப்பா! இங்கேயும் குண்டு போடும் விமானங்கள் வருமா?'' ஏ்னறு

அவளை இறுக்கமாக அணைத்து முத்தமிட்ட வண்ணம் டாக்டர் கூறுகின்றார்

"இங்க அந்த விமானங்கள் வராது அம்மா. நீங்கள் நித்திரை கொள்ளுங்கோ. நாளைக்கு ஸ்கூலுக்கு போகவேண்டும்'' என்கிறார்

இரு பக்கமும் திரும்பிப் பார்க்கின்றேன். இருளுக்குள் சில முகங்கள் தெரிகின்றன. சபையில் ஒரே அமைதி. சிலர் கண்களில் கண்ணீர் கசிவதைப் பார்க்கின்றேன்

போரில் மடிந்த தங்கள் உறவுகளின் முகங்கள் அவர்களது ஞாபகத்திற்கு வந்திருக்கலாம்.

"பொய்யா விளக்கு'' தோடர்ந்து எரிந்த வண்ணம் நகர்கின்றது

மீண்டும் டாக்டர் தனது மனைவி உறங்கிக்கொண்டிருந்த அறைக்குள் சென்று கட்டிலில சாய்கின்றார். சிறிது நேரத்தில் அவரது அகக் கண்களில் குண்டு வீச்சு விமானங்கள் பறந்து வந்து குண்டுகளை போடுவதை காண்கின்றார் போலும். அவரது உடல் நடுங்குன்றது. முகம் நன்றாக வேர்வைத் துளிகளால் நனைகின்றது. அவரும் நித்திரை கொள்ள முடியாமல் தவிக்கின்றார். பின்னர் கட்டிலை விட்டு எழுந்து சென்று ஜன்னல்களின் ஊடாகத் தெரியும் தெரு விளக்குகளைப் பார்க்கின்றார்

"தொடர்ந்து எம்மை இறுதி யுத்தம் நிகழ்ந்த வன்னி மண்ணுக்கு அழைத்துச் செல்கின்றார். அங்கு குண்டு வீச்சுகளும் காயமடைந்த ஆண்கள் பெண்கள் குழந்தைகள் என அனைத்து வயதினரும் வைத்தியசாலைக் கட்டடத்தில் இடங்கள் இல்லாமல் போக தற்காலிகமான கொட்டகைகளுக்குள் டாக்டர் வரதராஜா தனது உதவி வைத்தியர்களோடும் தாதிகளோடும் இருந்து ஓய்வின்றி வைத்திய சேவையை வழங்குகின்றார்.

இந்த கொடிய நாட்களை நேரடியாக அனுபவித்தவர் என்ற வகையில் டாக்டர் வரராஜா பொய்யா விளக்கும் திரைப்படத்தின் இயக்குனர், ஒட்டாவா நகரில பணிபுரியும் தனேஸ், அவர்களுக்கு மேற்படி காட்சிகளை யதார்த்தமாக அமைவதற்கு மிகச் சிறந்த வகையில் உதவியிருப்பார் என்றே நாம் கூறலாம்.

வன்னி மண்ணை ஒத்த ஒரு கரையோரப் பகுதியில் எங்கோ ஒரு இடத்தில் இந்த திரைப்படத்திற்கான படப்பிடிப்பிடிப்புக்கள் இடம்பெற்றிருந்தாலும், குண்டு தாக்குதல் நடைபெறுவதும் காயப்பட்டவர்கள் மற்றும் கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் மருந்துகள் இல்லாமல் வைத்தியர்கள் தவிக்கும் காட்சிகள், வெளிநாட்டு தொண்டு நிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் நேர்மையான பணிகள் அனைத்தையும் நாம் காட்சிகளின் ஊடாக பார்க்கும் போது, நாம் நேரடியாகவே வன்னி மண்ணில் முள்ளிவாய்க்கால் பகுதியில் இலங்கை இராணுவமும் வெளிநாட்டு அரச பய்ங்கரவாதிகளின் கண்மூடித்தனமான குண்டுத் தாக்குதல்களும் உண்மையாகவே இடம்பெறுவது



போன்றே படமாக்கியுள்ள சிறந்த படைப்பாகவே "பொய்யா விளக்கை'' நாம் கண்டோம்.

வன்னி மண்ணில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது எவ்விதமான ஈவிரக்கமின்றி இராணுவம் குண்டுகளை ஆகாயத்திலிருந்து விசி எறிந்தமை, தரை

நகர்வுகளின்போது பல நாட்டுப் படைகள் எவ்வாறு எமது மக்களை தாக்கி அழித்தார்கள் என்ற விடங்கள் நிஜமான காட்சிகளாகவே எமக்கு அளித்துள்ளார்கள் டாக்டர் வரதராஜாவும் இயக்குனர் தனேஸ், மற்றும் ஏனைய தொழில் நுட்பக் கலைஞர்களும்..

"பொய்யா விளக்கின்'' இறுதிப் பகுதி மிகவும் திகில் நிறைந்ததாக இருந்தது என்றே கூறவேண்டும்.

தனது மனைவியையும் பிள்ளையை யுத்தம் நடைபெறும் பகுதியிலிருந்து வெளியேற்றும் டாக்டர் வரதராஜா தொடர்ந்து மக்களை காப்பாற்றும் முயற்சியிலே தன்னை அர்ப்பணித்து வருகின்றார்.

தனது சக வைத்திய அதிகாரி ஒருவரின் இரண்டு குழந்தைகள் விமானக் குண்டு வீச்சினால் கொல்லப்பட்ட பின்னரும் அந்த வைத்தியர் அந்த மண்ணைவிட்டு வெளியேறாமல் டாக்டர் வரதசாவோடு உடனிருந்து சேவைகளைத




தொடரும் காட்சிகள் மனதை உருக்கின. தொடர்ந்து டாக்டர் வரதராஜா தரையிலிருந்து தன்னைத தாக்கிய இராணுவத்தினர துப்பாக்கிச் சூட்டினால் காயமடைய, காயப்பட்டவர்களோடு இராணுவததின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருகின்றபோது, இராணுவப் பயங்கரவாதிகளால் தடுதது நிறுததப்படட பின்னர் அவரை சுட்டுக்கொல்லும் படி வந்த உத்தரவை நிறைவேற்றும் வகையில் அவர் இராணுவக் கும்பலினால் அழைதுச் செல்லப்பட்டு, ஒரு ஒதுக்கமான காட்டுப் பகுதியில் அவரது தலையை துணிக்கவசம் ஒன்றினால் மூடி அவரது தலையில் சுட்டு கொன்று விட துப்பாக்கியை எடுத்து அதன் விசையை அழுத்த ஆயத்தமானபோது,

(......ம் பக்கம் பார்க்க)